பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

01 11 2025 SATURDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. டிஜிட்டல் தொழில்நுட்பம் முதல் உயிரி பொருளாதாரம் வரை பல்வேறு துறைகளில் நாடு அபாரமான வளர்ச்சியை அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தமிழ்நாட்டிற்கும், வாரணாசிக்கும் இடையே காலம் காலமாக ஆன்மிகம் மற்றும் கலாச்சார தொடர்புகள் உள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

3. 560-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைத்து, இந்தியா என்ற மாபெரும் தேசத்தை கட்டமைத்த Sardar Vallabhbhai Patel-ன் செயல் அசாதாரணமானது என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அக்டோபர் மாதம் கூடுதல் மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. Hylo ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

டிஜிட்டல் தொழில்நுட்பம் முதல் உயிரி பொருளாதாரம் வரை பல்வேறு துறைகளில் நாடு அபாரமான வளர்ச்சியை அடைந்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுதியுள்ள கட்டுரையை தமது சமூகவலைதளத்தில் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

கூட்டு முயற்சியின் வாயிலாக அறிவியல் மற்றும் புதுமையான கண்டுபிடிப்புகளில் உலக அளவில் இந்தியா முதன்மை நாடாக உருவெடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுயசார்பு பொருளாதாரத்தை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்கொண்டுள்ள இந்தியா, தற்போது உலக நாடுகளையும் ஊக்குவித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சந்திரனுக்கு விண்கலத்தை அனுப்பியதில், விண்வெளித்துறையில் நாடு அடைந்த முன்னேற்றத்தையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**>>>>>>><<<<<<**

தமிழ்நாட்டிற்கும், வாரணாசிக்கும் இடையே காலம் காலமாக ஆன்மிகம் மற்றும் கலாச்சார தொடர்புகள் உள்ளதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

அந்நகரில் தமிழகத்தின் நகரத்தார் சமூகத்தினர் கட்டியுள்ள தங்கும் விடுதியை நேற்று திறந்து வைத்துப் பேசிய அவர், இச்சமூகத்தினர் செல்லும் இடமெல்லாம் தமிழ்க் கலாச்சாரத்தை ஊக்குவித்து வருவதாக பாராட்டினார்.

மாநிலங்களுக்கு இடையிலான நம்பிக்கை மற்றும் ஒருங்கிணைப்பின் சின்னமாக இந்த புதிய கட்டிடம் திகழும் என்றும் அவர் கூறினார்.

தமிழகத்திலிருந்து, வாரணாசிக்கு வரும் ஆன்மிக பக்தர்களுக்கு இந்த கட்டிடம் பெரிதும் பயன்படுவதோடு, இளைய தலைமுறையினர் புனித நகருக்கு வருகை தர ஊக்கமளிக்கும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய உத்தரபிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத், மொழிகள் வேறுபட்டிருந்தாலும் இந்தியாவின் ஆன்மா ஒன்று தான் என்று கூறினார்.

ராமேஸ்வரம், காசி போன்ற புனித நகரங்களுக்கு இடையிலான வரலாற்று ரீதியிலான ஆன்மிக தொடர்புகளையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழக சட்ட அமைச்சர் திரு. எஸ். ரகுபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

>>>>>>><<<<<<<

ஆரோக்கியமான மகளிர் – வலுவான குடும்பம் என்ற மாபெரும் விழிப்புணர்வு இயக்கத்தின் மூலம், மூன்று கின்னஸ் உலக சாதனைகள் படைக்கப்பட்டுள்ளன.

செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி முதல் கடந்த மாதம் 2ஆம் தேதிவரை நாடுமுழுவதும் சுகாதார பராமரிப்பு தளத்தில், மிக அதிக எண்ணிக்கையில் பதிவுகள் நடைபெற்றுள்ளன.

3 கோடியே 21 லட்சத்திற்கும் அதிகமானோர் சுகாதார சேவைகள் தொடர்பாக பதிவு செய்துள்ளனர்.

ஒரே வாரத்தில் மார்பக புற்றுநோய் பரிசோதனைக்காக, சுமார் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பதிவு செய்துள்ளனர்.

உடல் உறுப்புகளை பரிசோதனை செய்ய ஒரே வாரத்தில், ஒரு லட்சத்து 25 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மத்திய – மாநில அரசு நிறுவனங்கள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பஞ்சாயத்து பிரதிநிதிகள், சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பள்ளி – கல்லூரி மாணவர்கள் இந்த இயக்கத்தில் பங்கேற்றதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>>><<<<<<<

560-க்கும் மேற்பட்ட சமஸ்தானங்களை ஒன்றிணைத்து, இந்தியா என்ற மாபெரும் தேசத்தை கட்டமைத்த Sardar Vallabhbhai Patel-ன் செயல் அசாதாரணமானது என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை, ஆளுநர் மாளிகையில் நேற்று நடைபெற்ற Sardar Vallabhbhai Patel-ன் 150-வது பிறந்தநாள் விழாவில் பேசிய அவர், மாபெரும் தியாகத்தாலும், திடமான மனஉறுதியாலும் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டதாக கூறினார்.

சுதந்திரப் போராட்டத்திற்கு பாடுபட்ட பலரது பங்களிப்பு வரலாற்றில் போதுமான அளவு பதிவாகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

உதாரணமாக, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஏற்படுத்திய இந்திய தேசிய ராணுவத்தில் இணைந்து தமிழகத்தைச் சேர்ந்த 4 ஆயிரத்து 600-க்கும் மேற்பட்டோர் நாட்டின் விடுதலைக்காக போராடினார்கள் என்றும் திரு. ஆர்.என். ரவி கூறினார்.

>>>>>>><<<<<<<

கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக, மத்திய புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் நேற்று இரண்டாவது நாளாக விசாரணை நடத்தினர்.

நெரிசல் நிகழ்ந்த கரூர் – ஈரோடு சாலையில், வேலுச்சாமிபுரம் முதல் கோதூர் வரை சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்திற்கு, இருபுறமும் முப்பரிமாண ஸ்கேனர் கருவிகளைக் கொண்டு சோதனை மேற்கொண்டனர்.

இந்த சோதனை இன்றும் தொடர்ந்து நடைபெறும் என்று சிபிஐ அதிகாரிகள் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<

சேலம் மாநகரம் உருவான தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி, அந்நகரில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ்பைட் - விஜயகுமார் 45 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<

தமிழகத்தில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக அக்டோபர் மாதம் கூடுதல் மழை பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடகிழக்கு பருவமழை தீவிரமாக இருந்ததாகவும், மாநிலம் முழுவதும் 23 புள்ளி மூன்று சென்டிமீட்டர் மழை பெய்ததாகவும், இது இயல்பை விட 36 சதவீதம் அதிகம் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

ராணிப்பேட்டை, திருநெல்வேலி, வேலூர் மாவட்டங்களில் கூடுதலாக மழை பெய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, வடக்கு அந்தமான் கடல்பகுதியின் மேல், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுவதாகவும், இதன் காரணமாக மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

மலபார் கடற்படைப் பயிற்சியில் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் இணைந்து இந்தியா பங்கேற்கும் என்று இந்திய கடற்படை கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

பெலாரஸிலிருந்து லிதுவேனியாவில் பலூன்கள் மூலம் நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களால் பால்டிக் நாடுமுழுவதும் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

>>>>>>><<<<<<<

“தேசிய பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டிற்காக இளைஞர்களை மேம்படுத்துதல்” என்ற தலைப்பில் இளைஞர்களுக்கான கருத்தரங்கை இந்திய ராணுவம் நடத்தியது.

>>>>>>><<<<<<

காஞ்சிபுரம் முருகன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் புனரமைக்கப்பட்ட விற்பனை நிலையத்தை மாநில கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு. ஆர்.காந்தி தொடங்கி வைத்தார்.

>>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் மத்திய அரசு பொதுத்துறை நிறுவனமான பவர்கிரிட் நிறுவனத்தின் சார்பில் ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

>>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் ராபி பருவத்திற்கான காப்பீடு பெறுவதற்கு டிசம்பர் 30ஆம் தேதி வரை விவசாயிகள் பதிவு செய்யலாம் என்று மாவட்ட ஆட்சியர் கே. இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<

செங்கல்பட்டு மாவட்டத்தில் தேர்தல் துறை சார்பில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கான பயிற்சி இன்று நடைபெறவுள்ளதால் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் தூய்மை பணியாளர்களுக்காக நேற்று நடத்தப்பட்ட குறைதீர்வு நாள் கூட்டத்தில் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவல்லி வழங்கினார்.

>>>>>>><<<<<<<

திருவண்ணாமலை மாவட்டத்தில் மத்திய அரசு செயல்படுத்தும் திட்டங்களை கண்காணிக்கும் மாவட்ட அளவிலான குழுவின் கூட்டம் நேற்று திருவண்ணாமலையில் நடைபெற்றது.

>>>>>>><<<<<<<

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் சென்னை கிளை சார்பாக, குளிர்பதன மற்றும் குளிரூட்டும் பயன்பாடுகளுக்கான செம்புக்குழாய்கள் தொடர்பான வரைவு திருத்தம் குறித்த ‘விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடத்தப்பட்டது.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

Hylo ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Unnati Hooda அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 22-20, 21-13 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Lin Hsiang Ti-யை வென்றார்.

இறுதிப்போட்டியில் அவர் இந்தோனேஷியாவின் Putri Kusuma Wardani-யை எதிர்கொள்கிறார்.

>>>>>>><<<<<<<

புரோ கபடி லீக் போட்டியில், தில்லி அணி பட்டம் வென்றது.

தில்லியில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், அந்த அணி 31-28 என்ற புள்ளிக்கணக்கில் புனே அணியை வென்றது.

பட்டம் வென்ற தில்லி அணிக்கு 3 கோடி ரூபாயும், இரண்டாவது இடத்தைப் பெற்ற புனே அணிக்கு 1 கோடியே 80 லட்சம் ரூபாயும் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது.

>>>>>>>END<<<<<<<